DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.171/2019 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW.9 |
| | { Prosecution |
| | { |

| | |
|---|---|
| Name | : அண்ணாமலை |
| Father's Name | : --- |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.12.2024.

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.9 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

22 ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் ஐய்யம்பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1,2 யை தெரியும். அ.சா.2 யை எனக்கு 30 வருடங்களாக தெரியும். அவர் சிமெண்ட் பேக்டரியில் வேலை செய்து வந்தார். அவருக்கு சொந்தமான நிலம் மூலப்பாதையில் சுமார் 4-1/2 ஏக்கர் உள்ளது. அவருக்கு 2 மகன்கள். அவர்கள் பெயர்

குப்பண்ணன், சின்னுசாமி. அதில் சின்னுசாமி விபத்தில் இறந்துவிட்டார். அதன் பிறகு சடையனின் மனைவி சாணார்பட்டியில் சகோதரர் வீட்டில் வசித்து வருகிறார். இறந்து போன சின்னுசாமியின் மனைவி பேபி பூலாம்பட்டியில் வசித்து வருகிறார். அவரை எனக்கு தெரியும். 21 ம் எதிரியை சாட்சி அடையாளம் காட்டினார். 21 ம் எதிரி தனது பாகத்தை பிரித்து கொடுக்க வேண்டும் என்று மாமனாரிடம் கேட்டு வந்தார். ஆனால் அவரது மாமனார் பிரித்து கொடுக்க மறுத்துவிட்டார். இந்நிலையில் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு சடையன் சிலநாட்களாக ஊரில் இல்லை. அவர் திரும்பி வந்த பின்பு நான் அவரிடம் எங்கு சென்றிருந்தாய் என்று கேட்டதற்கு என்னை அரசியல் கட்சியினர் கடத்தி கொண்டு சென்று சொத்தை கிரையம் எழுதி வாங்கி கொண்டதாக சொன்னார். அந்த கிரையம் முடிந்து சுமார் ஒரு மாதத்தில் ஒரு நாள் காலை சுமார் 10 மணிக்கு சுமார் 50 நபர்கள் காட்டில் வந்து JCB கொண்டு வீட்டை இடித்தார்கள், காட்டை நிரவினார்கள். வீட்டிலிருந்த சாமான்களை தூக்கி வெளியே போட்டுவிட்டார்கள். இந்த சம்பவத்தை நான் என் வீட்டில் இருந்து கொண்டு பார்த்தேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சடையன் சிலநாட்கள் ஊரில் இல்லாத போது அவரை கடத்தி சென்று கிரையம் எழுதி வாங்கி கொண்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் வீட்டிலிருந்து சம்பவ இடம் சுமார் ¾ கி.மீ தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் பற்றி எனக்கு சடையன் மகன் சொல்லி தெரியும். நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

( மற்ற எதிரிகள் 1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.)

Sd/-அண்ணாமலை

Sd/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி